පාර්ලිමේන්තු ප්‍රශ්න මාලා අංක - 492
ආයතනයේ නම - ජාතික උද්භිද උද්‍යාන දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක **119(4)** යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - **492**
நிறுவனத்தின் பெயர் - தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்.

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4)-இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புகளும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

**Parliamentary Series No. - 492**
**Name of the Institution - Department of National Botanic Gardens**

**Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No .119(4)**

பாராளுமன்றக் கேள்வித் தொடர் இலக்கம் - 492
நிறுவனத்தின் பெயர் - தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம்.

நிலையியல் கட்டளை இல் 119(4) இன் கீழ் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவால் பாராளுமன்றத்திற்கு தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை சமர்ப்பித்தல்.- நிதியாண்டு 2023

| | 2023 நிதியாண்டிற்கான செயலாற்றுகை மதிப்பீட்டில் கண்டறியப்பட்ட பலவீனங்கள் | குறைபாடுகளைச் சரிசெய்வதற்காக எடுக்கப்படடுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலை |
|---|---|---|
| முதலாவது பகுதி | | |
| 1 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்ளை அனுப்பப்படவில்கல. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்க ஒரு மாதத்திற்கு மேல் எடுத்துக்கொள்ளவில்லை. மேலும், ஐயவினாக்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் தாவரவியல் பூங்காக்கள் மற்றும் அலகுகளுக்கு கணய்காய்வு ஐயவினாக்கள் அனுப்பப்பட்ட சந்தர்ப்பங்களில் , பதிலளிக்க ஒரு மாதத்திற்கும் மேலாகியுள்ளது. ஏனெனில், உரிய பிரிவிலிருந்து தகவல்களை (பதில்களை உறுதிப்படுத்தத் தேவையான இணைப்புகள் உட்பட) கோருவதற்கு நேரம் எடுப்பதால், அத்தகைய ஐயவினாக்களுக்குப் பதிலளிப்பது சற்றுக் கடினமாக உள்ளது.<br>இருப்பினும், முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஐயவினாக்களுக்கான பதில்கள் கணக்காய்வாளர் அலுவலகத்திற்கு உடனடியாக அனுப்பப்பட்டு வருவதாகவும், ஒரு மாதத்திற்குள் பதில்கள் வழங்கப்படுவதற்காக உரிய நேரத்திற்கு தலைமை அலுவலகத்திற்கு பதில்களை அனுப்புமாறு அலகுத் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். |
| 2 | உள்ளக கணக்ாய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்ாமைக்கான சந்தர்ப்பங்கள் காணப்பட்டிருந்தன.. | உள்ளக கணக்ாய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத பதில்களிக்க ஒரு மாதத்திற்கும் மேலான கால அவகாசம் வழங்கப்படவில்லை. மேலும், ஐயவினாக்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் தாவரவியல் பூங்காக்கள் மற்றும் அலகுகளுக்கு கணய்காய்வு ஐயவினாக்கள் அனுப்பப்பட்ட சந்தர்ப்பங்களில் , பதிலளிக்க ஒரு மாதத்திற்கும் மேலாகியுள்ளது. ஏனெனில், உரிய பிரிவிலிருந்து தகவல்களை (பதில்களை உறுதிப்படுத்தத் தேவையான இணைப்புகள் உட்பட) கோருவதற்கு நேரம் எடுப்பதால், அத்தகைய ஐயவினாக்களுக்குப் பதிலளிப்பது சற்றுக் கடினமாக உள்ளது. |

| | | |
|---|---|---|
| | | இருப்பினும், முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஐயவினாக்களுக்கான பதில்கள் கணக்காய்வாளர் அலுவலகத்திற்கு உடனடியாக அனுப்பப்பட்டு வருவதாகவும், ஒரு மாதத்திற்குள் பதில்கள் வழங்கப்படுவதற்காக உரிய நேரத்திற்கு தலைமை அலுவலகத்திற்கு பதில்களை அனுப்புமாறு அலகுத் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். |
| 3 | 2017.06.26ஆம் திகதிய 1/2017 ஆம் இலகக சொத்துக்ளைகளுகான முகாமைத்துவ சுற்றறிக்கையின் 13ஆம் பந்தியின் பிரகாரம் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுதல் இணைப்பாக்கம் செய்யப்படுவதற்காக பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து னொன்ட்ரோலர் நாயகம் அலுவலத்திற்கு அறிவிக்காமை. | 2023.10.09 ஆம் திகதியில் சொத்துக்கள் குறித்த தகவல்களை அறிக்கையிடுவதற்காக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு, அதனைத் னொன்ட்ரோலர் நாயகம் அலுவலத்திற்கு அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இணைப்பு -01) |
| 4 | 2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி 1 இன் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் நி.ஓ.756 (6) இன் பிரகாரம் பொருள் கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு குறித்த தினத்தில் உரிய அறிக்கைளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாமை. | 14.06.2024.06.14 ஆம் திகதியில் பொருட்கள் கணிப்பாய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டன. மேலும், இரண்டு அலகுகளின் அப்புறப்படுத்தும் பொருட்களின் அறிக்கைகள் பிரதான அலுவலகத்திற்கு கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக, அவ்விரண்டு அறிக்கைகளும் 2024.07.29 ஆம் திகதி அனுப்பப்பட்டன.<br><br>துற்போது 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி 1 இன் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் நி.ஓ.756 (6) இன் பிரகாரம் பொருள் கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு குறித்த தினத்தில் உரிய அறிக்கைளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளன.(இணைப்பு -02,03) |
| 5 | வருடாந்த பொருட்கள் கணிப்பாய்வில் வெளிப்படுத்தப்பட்ட மேலதிகம், பற்றாக்குறை மற்றும் ஏனைய பரிந்துரைகள், நிர்ணயிக்கப்பட்ட காலஎல்லைக்குள் செயல்படுத்தப்படவில்லை | மேலதிகம் அல்லது புற்றாக்குறை எதுவும் பதிவாகவில்லை. |
| 6 | நி.ஓ. 94 (1) இன்படி செலவு விடயமொன்றுக்கு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட பின்னர், ஆண்டிறுதியில் எஞ்சிய ஒதுக்கீடுகளின் வரம்பினை விஞ்சாதபடி பொறுப்புக்கள் | |

| | | |
|---|---|---|
| | ஏற்கப்பட்டிருந்தது. | |
| 7 | ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுகவக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கப்படவில்லை. | 2023.12.31 ஆம் திகதியில் வசூலிக்கப்பட வேண்டிய கடன் தொகை ரூ. 4,343,939.00 ஆக இருந்தது, அதில் **85%** 2026.04.30 ஆம் திகதியில் வசூலிக்கப்பட்டுள்ளது.<br><br>2026.04.30 ஆம் திகதியில், வசூலிக்கப்பட வேண்டிய கடன் தொகை ரூ. 622,573.34 ஆகும். வசூலிக்கப்பட வேண்டிய கடன் தொகை தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.<br><br>மரணித்த அதிகாரிகளிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய கடன் தொகை<br><br>திரு. என்.பி. ஆர். நந்தசினா - வசூலிக்கப்பட வேண்டிய கடன் தொகை - ரூ. 34,365.00<br>ஓய்வூதிய உரிமை தொடர்பாக, வாரிசுக்கு பணம் செலுத்துவதற்கான ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு ஓய்வூதியத் திணைக்களம் உள்ளக உத்தரவுகள் பிரிவுக்குத் தெரிவித்துள்ளது.<br><br>இருப்பினும், வாரிசு குறித்த குறிப்பிட்ட தகவலில் சிக்கல் எழுந்துள்ளதால், வாரிசுகளைச் சரிபார்க்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.<br><br>திரு. டபிள்யூ.ஆர்.எம். விக்ரமநாயக்க - வசூலிக்கப்பட வேண்டிய கடன் - ரூ. 152,648.34 நிலுவைத் தொகையில் ரூ. 107,048.34.<br><br>2024 மே மாதம் முதல் மாதாந்தம் வசூலிக்கப்படுகிறது)<br>விழா முற்பணம் - ரூ. 8750.00<br>விஸேட - ரூ. 2800.00<br><br>பணியிலிருந்து விலகிய அதிகாரிகளிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய கடன் தொகை<br><br>திரு. ஏ.எம்.எஸ். ஹெட்டிபராச்சி - வசூலிக்கப்பட வேண்டிய கடன் - ரூ. 179,350.00<br>அமைச்சின் செயலாளர் கோரிக்கையின் பேரில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கான தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கடனைச் செலுத்துமாறு கோரி, 2026.04.08 ஆம் திகதி உரிய அதிகாரிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.<br><br>(இணைப்பு 04) |

| | | |
|---|---|---|
| | | ஓய்வுபெற்ற அதிகாரிகளிடமிருந்து பெற வேண்டிய கடன் நிலுவை<br><br>திரு. கே.ஜி. ஜெயசிங்க - இடர் கடன் - ரூ. 84,460.00<br>பணிக்கொடையைத் தயாரிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.<br><br>திரு. எஸ்.பி. விஜேரத்ன - இடர் கடண் தொகை - ரூ. 205,800.00<br>ஓய்வூதிய கோப்பு ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| 8 | பொது வைப்புகள் கணக்கில் காலாவதியான வைப்புகள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | டெண்டர் வைப்புத்தொகைகளுக்கான பொது வைப்புக் கணக்கில் உள்ள ரூ. 15,000 நிலுவைத் தொகையானது, பேராதனை அரச தாவரவியல் பூங்கா அருங்காட்சியகப் புனரமைப்புத் திட்டம் தொடர்பானது என்பதையும், இது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை அத்தொகை பொது வைப்புக் கணக்கிலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.<br><br>பேராதனை அரச தாவரவியல் பூங்காக்கள் அருங்காட்சியக நவீனமயமாக்கல் திட்டத்திற்கான ஒப்பந்தக் கட்டணத் தொகையான ரூ. 4,938,003 மற்றும் ஒப்பந்தங்களுக்காகப் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தொகையான ரூ. 542,850 ஆகியவை தற்போது பொது வைப்புக் கணக்கில் உள்ளன. இது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை, அந்தக் கணக்குகளிலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.<br><br>மூன்றாம் தரப்பினருக்குத் திருப்பிச் செலுத்துவதற்காகப் பொது வைப்புக் கணக்கில் உள்ள Conservation actions for threatened endemic species செயற்திட்டம் மற்றும் Development of conservation plan for two endemic and critically endangered (CR) tree species போன்ற செயல் திட்டங்களுக்கு பெறப்பட்ட மீதமுள்ள நிதியாகும், குறித்த திட்டம் இன்னும் செயல்பாட்டில் இருப்பதால், செயல் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான வழக்கமான கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டியுள்ளதால் அவை தொடந்தும் தக்கவைக்கப்பட்டுள்ளன.<br><br>இதற்கு மேலதிகமாக, 2023 ஆம் ஆண்டுடன் தொடர்பான நிலுவையில் உள்ள அனைத்து வைப்புத்தொகைகள் மீதும் பிரிவு 571-இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 9 | நி.ஒ 371 இன் பிரகாரம், வெளியிடப்பட்ட பணி குறித்த இடைக்கால கட்டு நிதி ஒரு மாதத்துக்குள் செலுத்தி தீர்க்கப்படவில்லை. | |

| | | |
|---|---|---|
| | | |
| 10 | 1994.04.20 ஆம் திகதிய இலக்கம் 30/94 ஆம் அரசாங்கக் கணக்குச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிறுவனத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டு மானியங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | Development of conservation plan for two endemic and CR tree species *Stemonoporus affinis* and *Stemonoporus gracilis*" என்ற முன்மொழிவு Botanical Garden Conservation International (BGCI) எனும் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போது இம் முன்மொழிவு, நிகழ்ச்சித் திட்ட உதவியாளரால் தயாரிக்கப்பட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர், எங்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவை BGCI அமைப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர், இந்தத் திட்டத்தை ஆண்டுக்கு ஆண்டு மூன்று ஆண்டுகள் (2021 முதல் 2023 வரை) செயல்படுத்துவதற்கான ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திடும்போது, இலங்கைத் தரப்பின் சார்பாக தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் என்ற பெயரில் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. மேலும், ஒப்பந்தத்தின்படி திட்டத்தின் அனைத்துப் பொறுப்புகளையும் பணிப்பாளர் நாயகமே ஏற்றுக்கொண்டார். அதன்படி, வெளிநாட்டு மானியங்களை வழங்கிய நிறுவனமான BGCI சம்பந்தப்பட்ட வெளிநாட்டு மானியங்களை அனுப்புவதற்காக ஒப்பந்தம் செய்த தரப்பினரின் பெயரிலான கணக்கில் பணத்தை வரவு வைப்பதற்கான உரிய விவரங்களைக் கோரியதால், திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பெயரிலான இலங்கை வங்கி நடப்புக் கணக்கின் விவரங்கள் அந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்டன. இதற்காக ஒதுக்கப்பட்ட நிதிகள்... அந்த மூன்று ஆண்டுகளுக்கான தொகை மேற்கண்ட கணக்கிற்கு அனுப்பப்பட்டு, அந்த நிதி திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, அதற்கான செலவினங்களும் மேற்கொள்ளப்பட்டன.<br><br>இருப்பினும், வெளிநாட்டு மானியங்களை அனுப்புவது தொடர்பாக பொதுக் கணக்குகள் சுற்றறிக்கையின்படி செயல்படுவதற்கான அறிவுறுத்தல்கள் தொடர்பான DNBG /F/08/DEPOST/பொது/2023ஆம் இலக்க மற்றும் 2023/06/27 திகதிய உள்ளக சுற்றறிக்கை மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை உங்களுக்குத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |

| | | |
|---|---|---|
| 11 | வெளிநாட்டு மானியமாக பெறப்பட்ட மொத்தப் பணமும் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்படவில்லை. | தற்போது, வெளிநாட்டுப் பணப் பரிமாற்றங்கள் திறைசேரியின் பிரதிச் செயலாளரின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்படுகின்றன. |
| **2 ஆம் பகுதி** | | |
| 12 | ஒட்டுமொத்த பணியாட்டொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | பணியாட்டொகுதிற்கான செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. |
| 13. | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50 % ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. | 2023 ஆம் ஆண்டில் பயிற்சித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு குறைவாக இருந்ததால், திட்டமிடப்பட்ட அனைத்துப் பயிற்சித் திட்டங்களையும் நடாத்துவதற்கு முடியாமல் போனது. மேலும், சேவைத் தேவைகளின் அடிப்படையில் அத்தியாவசியப் பயிற்சித் திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டன. |
| 14 | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான/ ஒப்புதலளிக்க மறுக்கின்ற/ பாதகமான மட்டத்தில் நிலவியது. | தகுதிவாய்ந்த அபிப்பிராயம் வழங்கப்பட்டுள்ளது. |
| 15 | பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துகரைள்/ கட்டளைகள் செயல்படுத்தப்படவிலலை. | பொதுக் கணக்குக் கணக்குக் குழுவின் உத்தரவுகளைச் செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>01. கம்பஹா தாவரவியல் பூங்காவின் அழகுபடுத்தி மேம்படுத்தும் பணி<br><br>இந்தத் திட்டம் 2017-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன் கீழ், பூச்செடிச் செய்கைக்காக சிறப்புப் பூப் பாத்திகள் அமைக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.<br><br>இந்தப் பாத்திகளில், பல்வேறு வண்ணங்களில் உள்ள பூச்செடிகள், ஆண்டு மலர்ச்செடிகளாக அவ்வப்போது மாற்றப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன.<br>நூற்று மேடைப் பிரிவிற்கு மேலதிகமாக, ஆண்டு புர்ச்செடிகளும் நாற்றுகளும் தொடர்ச்சியாக உற்பத்தி செய்யப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன.<br>(இணைப்பு-06.07)<br><br>02. ஹக்கல தாவரவியல் பூங்காவில் சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்கள் மீது நடவடிக்கை எடுத்தல்.<br><br>ஹக்கல தாவரவியல் பூங்காவிற்குச் சொந்தமான, பதுளை மற்றும் நுவரெலியா |

| | | |
|---|---|---|
| | | மாவட்டங்களில் சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகள் தொடர்பாக, நுவரெலியா மாவட்டச் செயலாளர் தலைமையில், தேசிய தாவரவியல் பூங்காக்களின் பணிப்பாளர் நாயகத்தின் பங்கேற்புடன் 2026.03.16 ஆம் திகதி கூட்டமொன்று நடைபெற்றது. அப்போது, பூங்காவிற்குள் அங்கீகரிக்கப்படாத ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட நிரந்தரக் கட்டிடங்களைக் கொண்ட காணிகளையும், காப்பகங்களாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட காணிகளையும் உள்ளடக்கி, ஒரு நில அளவைப் திட்டத்தை அளந்து தயாரிக்கவும், புதிய அளவீடு தொடர்பான நிலங்களை விவசாயப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்திற்கு முறைப்படி மாற்றவும் முடிவு செய்யப்பட்டது.<br><br>ஆதனடிப்படையில் நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்கள் தொடர்பான அளவீடுகளுக்கான கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட நில அளவையாளர் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. பூங்காவின் தோராயமான எல்லை ஜிபிஎஸ் மூலம் குறிக்கப்பட்டுள்ளதுடன், பூங்காவில் சேர்க்கப்படக்கூடிய ஒவ்வொரு நிலப்பகுதியையும் அளவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.<br><br>03. ஹக்கல தாவரவியல் பூங்காவில் உள்ள உணவகத்தின் வாடகை தொடர்பாக.<br><br>ஹக்கல தாவரவியல் பூங்காவில் உள்ள உணவகத்தின் குத்தகைக்காக, 2007 ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதல் 2013 ஜூலை மாதம் வரை ஊழியர் சேமநலச் சங்கக் கணக்கில் செலுத்தப்பட்ட ரூ. 1,053,900.00 தொகையும், பொது வைப்புக் கணக்கில் செலுத்தப்பட்ட ரூ. 270,650.00 தொகையும் அரசாங்க வருவாய்க் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளன. |
| 16 | அதிபைட்ச சேவைக் காலத்தை நிறைவு செய்த அதிகாரிகளை முறையாக இடமாற்றம் செய்யப்படவில்லை.பிரதிச் செயலாளரின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்படவிலலை. | அ)<br>தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தில் பணியாற்றும் அனைத்து இணைந்த சேவைகள் அதிகாரிகளின் விவரங்களும், பொது நிர்வாக அமைச்சின் இணையதளத்தில் உள்ள சேவைத் தகவல் புதுப்பிப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், இத்துறையில் 5 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி வரும் அதிகாரிகளின் விவரங்கள் அடங்கிய பட்டியல்கள், இணைந்த சேவையின் வருடாந்த இடமாற்ற சபைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இணைந்த சேவையில் நடைபெறும் இடமாற்றங்கள் இத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நடைபெறுகின்றன. |

| | | |
|---|---|---|
| | | ஆ)<br>இலங்கை விஞ்ஞான சேவையின் பதவிகளுக்காக வருடாந்த இடமாற்ற நடைமுறை தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தற்போதைய பதவியில் 3 ஆண்டுகள் சேவையாற்றிய அதிகாரிகளை 2026.06.01 ஆம் திகதி முதல் இடமாற்றம் செய்வதற்கான ஏற்பாடுகள் தற்போது செய்யப்பட்டு வருகின்றன.<br><br>இ)<br>பூங்கா அபிவிருத்தி உதவியாளர் மற்றும் கட்டணம் அறவீட்டு உதவியாளர் ஆகிய பதவிகளுக்கான இடமாற்ற நடைமுறையும் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2027.01.01 ஆம் திகதி முதல் இடமாற்றங்கள் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>ஈ)<br>தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்திற்குரிய பூங்காக்களுக்கு கனிஸ்ட ஊழியர்களைப் பணியமர்த்தும்போது, தாவரவியல் பூங்காக்களுக்கு அருகிலுள்ள பகுதிகளில் வசிப்பவர்களும் சம்பந்தப்பட்ட பணியமர்த்தலுக்குக் கருத்தில் கொள்ளப்படுவார்கள். எனவே, அவர்களின் இடமாற்றம், சேவையின் தேவை மற்றும் வசிப்பிட மாற்றத்தின் அடிப்படையில் செய்யப்படுகின்றது. வாசல்தளம் வளங்க முடியாதுள்ளது மேலும், தற்போதைய பொருளாதாரச் சூழலின் அடிப்படையில், குறைந்த ஊதியம் பெறும் ஊழியர்களை, புவியியல் ரீதியாக ஒன்றுக்கொன்று தொலைவில் உள்ள பூங்காக்களுக்கு அவ்வப்போது இடமாற்றம் செய்வது மனிதாபிமானமற்றது என்பதை உங்களுக்குத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |